


சிவ சிவ! அவற்றை ஆயுதங்கள் என்றா நினைக்கிறீர்கள்? அபசாரம், அபசாரம். ஜப்பானின் எதிர்காலம் என்பது ஆயுதங்களில் இல்லை நண்பர்களே. விவசாயத்தில் இருக்கிறது. நெல்லும் கரும்பும் வாழையும் பார்லியும் சோளமும்தான் ஜீவாதாரம். ஆயுதங்களோ, மற்றவையோ இல்லை. ஓம் ஷின்ரிக்கியோவை நீங்கள் என்னவென்று நினைத்தீர்கள்? வெறும் ஆன்மிக இயக்கம் என்றா? இல்லை நண்பர்களே. இது ஒரு மக்கள் இயக்கம். இல்லாதுபோனால், நாங்கள் அரசியலில் இறங்கியிருப்போமா? பள்ளி, கல்லூரிகளை ஏன் நடத்தப்போகிறோம்? விஞ்ஞானத்தில் மெய்ஞானத்தைக் கலந்து அஞ்ஞான இருள் அகற்ற உதித்திருக்கும் இயக்கம் இது. எங்களுக்கு விவசாயமும் விலக்கில்லை. நீங்கள் எங்கள் ஆசிரமங்களில் கண்டெடுத்த ரசாயனங்கள் உங்கள் பார்வையில் ஆயுதங்களாகத் தெரிகின்றன. ஆனால், பரம்பொருளின் பார்வையில் அவையெல்லாம் ரசாயன உரங்கள். எங்கள் கூட்டு விவசாயப் பண்ணைகளில் பயன்படுத்துவதற்காகச் சேமிக்கப்பட்டிருப்பவை. சந்தேகமிருந்தால், நீங்கள் அனைவரும் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி சுமாருக்கு எமது தலைமையகத்துக்கு வரலாம். கலர் வீடியோ கோச்சில் காவலர்களையும் பத்திரிகையாளர்களையும் அழைத்துச் சென்று எங்கள் பண்ணைகளைச் சுற்றிக் காட்டத் தயார். அங்கே நீங்கள் சுகமாக இளநீர் அருந்தலாம். நல்ல மல்லாக்கொட்டை விளைந்திருக்கிறது. பிடுங்கி, அலசிக் காயவைத்து, வறுத்து மசாலா சேர்த்துத் தலையில் அரைக்கலாம். சே, சாப்பிடலாம். ஆளுக்கொரு மூட்டை அரிசி எடுத்துச் செல்லவும் ஆட்சேபணை இல்லை. என்ன வருகிறீர்களா?

மேற்படி பேராகிராஃபை ஒரு பத்திரிகை அறிக்கை ஸ்டைலில் மாற்றி வாசித்துக்கொள்ளவும். சாரம் இதுதான். ஆசிரமத்தில் கண்டறியப்பட்ட ரசாயன ஆயுதங்களெல்லாம் உரம் தயாரிப்பதற்காக வாங்கி வைக்கப்பட்டவை. தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு விட்டது, ஆமென்.


தகாஜி குனிமத்ஸு

அறிக்கையைப் படித்து வாயைப் பிளந்தது காவல் துறை. இந்த ஆள் வெறும் கிரிமினல் இல்லை, கேப்மாரி கிரிமினல் என்று முடிவு செய்தார்கள். உடனடியாக நீதித்துறை பரமாத்மாக்களைக் கெஞ்சி ஷோகோ அசஹாராவைக் கைது செய்ய வாரண்ட் வாங்கிக் கொண்டு புறப்பட்டார்கள். கையோடு ஓம் இயக்கத்தைச் சேர்ந்த அத்தனை பேரையும் கைது செய்யவும் உத்தரவாகியிருந்தது.

விஷயம் பேப்பர்களுக்குப் போவதற்கு முன்னால், நமது வெள்ளைத் தக்காளி எஸ்கேப் ஆகிப்போனார்.

எங்கே? எங்கே? எங்கே?

ஆசிரமம் ஆசிரமமாகத் தேடினார்கள். சந்து பொந்துகளிலெல்லாம் புகுந்து புறப்பட்டார்கள். ஜப்பானின் இண்டு இடுக்குகளைக்கூட விடாமல் தேடினார்கள். கொத்துக் கொத்தாக அடிப்பொடிகள் அகப்பட்டார்களே தவிர, அண்ணனைக் காணோம்.

உடனடியாக ஒரு தனிப்படை ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டது. ரஷ்ய அரசைக் கூப்பிட்டு விவரம் சொல்லி ஒத்துழைக்கக் கேட்டுக் கொண்டார்கள். வேறு எங்கெங்கெல்லாம் ஷோகோவுக்கு சிஷ்ய கோடிகளும் பக்த கோடிகளும் உண்டோ, அங்கெல்லாம் போனார்கள். கிடைத்த அத்தனை பேரையும், அத்தனை ஆதாரங்களையும் அள்ளி எடுத்துப் போட்டுக்கொண்டு வந்தார்கள்.

ஆச்சர்யம், ஷோகோவைப் பற்றிய ஒரு சின்ன க்ளூ கூடக் கிடைக்கவில்லை. ஆனால், பத்திரிகைகளுக்கு மட்டும் தினசரி அவரிடமிருந்து ஓர் அறிக்கை வீதம் வந்துகொண்டிருந்தது.

இது கலிகாலம். ஜப்பானிய அரசுக்கு கிலிகாலமும் கூட. காரணமில்லாமல் எங்களைத் துன்பத்தில் ஆழ்த்துகிறார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டு அழிவுக்கடவுளான பார்வதி புருஷன் சும்மா இருக்கமாட்டான். கண்டிப்பாக இவர்களுக்குத் தக்க தண்டனை கிடைத்தே தீரும். புத்தம் சரணம் கச்சாமி.

'மவன நீ மட்டும் மாட்னா சட்னிதானடா' என்று கறுவிக்கொண்டிருந்தது காவல் துறை.

அதே சமயம், ஷோகோ தன் இறுதித் திருவிளையாடலையும் ஒருபுறம் ஆரம்பிக்கத் தவறவில்லை.

அன்றைக்கு மார்ச் 30-ம் தேதி. 'ஜப்பான் நேஷனல் போலீஸ் ஏஜென்சி'யின் தலைவர் தகாஜி குனிமத்ஸு (Takaji Kunimatsu) அலுவலகத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். 'சாயங்காலம் வரும்போது மறக்காம அரைக்கிலோ மொளகா பஜ்ஜி வாங்கிட்டு வாங்க' என்று அவரது திருமதி சொல்லி வழியனுப்பித் திரும்பக்கூட இல்லை.

எங்கிருந்தோ சீறி வந்த துப்பாக்கிக் குண்டுகள், அவரது தோளில் ஒன்றும் கழுத்தில் ஒன்றும் கன்னத்தில் ஒன்றும் நெஞ்சுக்கு நாலு இஞ்ச் கீழே ஒன்றுமாகப் பாய, அப்படியே சரிந்து விழுந்தார்.

வினாடிப் பொழுதில் பிராந்தியம் பரபரப்பாகிவிட்டது. ஜீப்புகள் பறக்க, சைரன்கள் ஒலிக்க, போட்டோ ஃப்ளாஷ்கள் மின்ன, டி.ஜி.பி., ஆஸ்பத்திரி கட்டிலில் சுவாசக் குழாய்கள் சகிதம் மறுநாள் போஸ் கொடுத்தார். பிழைத்தது பெரிய விஷயம். நிறைய ஆபரேஷனெல்லாம் பண்ணித்தான் காப்பாற்றினார்கள்.


விஞ்ஞானி
முராய் ஹிடோ

காவல் துறைக்கு வெறி அதிகரித்துவிட்டது. ஒரு மாத காலத்துக்குள் ஷோகோவைப் பிடித்தே தீருவது என்று ஆத்தா மேல் சபதம் போட்டுவிட்டுத் தேடுதல் வேட்டையைத் தீவிரப்படுத்தினார்கள்.

இப்போதும் ஷோகோ ஓர் அறிக்கை விட்டார். 'அப்பனே, முருகா, ஞானபண்டிதா. நடக்கிற எல்லாவற்றுக்கும் என்னைக் குறிவைக்காதே என்னப்பனே. அது அமெரிக்கச் சதி. எங்களை இதில் மாட்டிவிட்டுவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். அவர்களுக்கு லிங்காதிபதி நல்லதொரு தீர்ப்பளிப்பார்.'

இந்த அறிக்கைக்கு அவர் ஒரு பின்னிணைப்பும் கொடுத்திருந்தார். அமெரிக்காவைப் பரமசிவன் பார்த்துக் கொள்வார். ஆனால், ஏப்ரல் 15-ம் தேதி ஜப்பானுக்கு ஏற்படப்போகிற அதிர்ச்சியை யார் பார்த்துக்கொள்வது? ஒரு பூகம்பம் ஏற்படப்போகிறது. அப்புறம் நிலமெல்லாம் ரத்தம்தான். பிறகு எங்கிருந்து வரும் சத்தம்?

ஷோகோ பூகம்பம் என்று எதனைச் சொல்லியிருந்தார் என ஆராய்ச்சி பண்ணவெல்லாம்

அவகாசம் இல்லை. கிழம் ஏதோ விவகாரத்துக்குத் திட்டம் போடுகிறது என்பது மட்டும் புரிந்துவிட்டது. உடனே அலர்ட் ஆன காவல் துறை, ஜப்பான் முழுதும் பாதுகாப்பு ஏற்பாடுகளை பலப்படுத்தியது. அனைத்து மருத்துவமனைகளிலும் ரசாயன ஆயுதத் தாக்குதலுக்கு எதிரான பாதுகாப்பு ஏற்பாடுகள் உடனடியாகச் செய்யப்பட்டன. பேருந்துகள், ரயில்கள், விமான நிலையங்கள் என்று அனைத்துப் பொது இடங்களிலும் ஏதாவது அசம்பாவிதம் என்றால் தற்காத்துக் கொள்வது எப்படி என்று வீடியோக் காட்சிகள் தயாரிக்கப்பட்டுப் பொதுமக்களுக்குப் போட்டுக் காண்பிக்கப்பட்டன.

'அடையாளம் தெரியாத பிளாஸ்டிக் பைகளைத் தொடாதீர்கள். எந்தப் பொருளையுமே தொடாதீர்கள். ஏதாவது வாசனை வந்தால் உடனே பிராணாயாமத்துக்குப் போய்விடவும். இடத்தை காலி பண்ணிவிடவும். காவலர்களுக்குத் தகவல் தரவும். நீங்களாக எதையும் தொட்டு ஆராய்ச்சி செய்து நோபல் பரிசுக்கு முயற்சி செய்ய வேண்டாம். எதற்கும், எப்போதும் கையில் ஒரு முகமூடி வைத்திருங்கள். வெளியில் போகும்போது ஜைனத் துறவிகள் போல் மூக்கையும் வாயையும் சேர்த்து மூடும் கர்ச்சிப் அணிந்து செல்லுங்கள்.'

இதற்குமேல் மக்களைக் கலவரப்படுத்த முடியுமா என்ன? எங்காவது பாப்கார்ன் பொறித்தால் கூட அலறியடித்துக்கொண்டு ஓட ஆரம்பித்தார்கள், அப்பாவி ஜப்பானியர்கள். காவல் துறையினர் இருபத்து நான்கு மணிநேரமும் கண் விழித்துக் காவல் காத்தார்கள். பொதுமக்களின் பயத்தைப் போக்குவதே பெரும்பாடாக இருந்தது.

குறிப்பிட்ட பதினைந்தாம் தேதி ஜப்பானில் அநேகமாக எந்த அலுவலகமும் இயங்கவில்லை. பள்ளி, கல்லூரிகள் மூடப்பட்டிருந்தன. சாலைகள் வெறிச்சோடிக் கிடந்தன. உறங்கவே உறங்காத நகரமான டோக்கியோவே சகாரா பாலைவனம் மாதிரி காட்சியளித்தது. ராத்திரிக் கூத்து க்ளப்புகளெல்லாம் இழுத்து மூடப்பட்டு ஒரு நாள் உத்தமக் கோலம் கொண்டன. அட ஒரு பத்துப் பைசா பட்டாணி கூட வாங்க முடியாதபடிக்கு ஆகிப்போனது என்றால், பார்த்துக் கொள்ளுங்கள்.

ஆனால், கில்லாடி ஷோகோ அறிவித்த நாளில் அழிவுத் திட்டம் எதையும் செயல்படுத்தவில்லை. படு சமர்த்தாக, தான் பதுங்கியிருந்த இடத்திலேயே லிங்காஷ்டகம் படித்துக்கொண்டு இருந்துவிட்டார் போலிருக்கிறது.

பிறகு உண்மை தெரியவந்தது. ஷோகோவின் ஆய்வகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த முராய் ஹிடோ (Murai Hideo) என்கிற விஞ்ஞானி, போலீஸில் சரணடைந்து, வாக்குமூலம் அளிக்க உத்தேசித்திருப்பதாக மகானுக்கு ஒரு தகவல் போயிருக்கிறது. நைச்சிய மாகப் பேசி அவரைத் தன் மறைவிடத்துக்கு வரவழைக்க அன்று முயற்சி மேற்கொண்டிருந்திருக்கிறார்.

ஆனால், அந்த விஞ்ஞானிக்கு ஷோகோவின் திட்டம் தெரிந்து எஸ்கேப் ஆகிவிட, தன் அழிவுத் திட்டத்தைக் கொஞ்சம் போஸ்ட்போன் பண்ணிவிட்டு, 'பிடிடா அந்த விஞ்ஞானியை' என்று ஆட்களை ஏவிவிட்டு, தாடியைக் கோபமுடன் உருவிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்.

அன்றைக்கு அவர் சிக்கவில்லை. ஆனால், சரியாக எட்டு நாள் கழித்து மாட்டிக்கொண்டார். அவரை டோக்கியோவில் இருந்த ஓம் தலைமையகத்தின் வாசலில் பொதுமக்கள் எதிரே நிற்கவைத்து (முன்னதாக பத்திரிகைகளுக்குத் தகவலும் சொல்லி அனுப்பி!) கேமராக்கள் முன்னிலையில் யாமாகுச்சி குமி என்கிற இளைஞன், யாரும் எதிர்பாராவகையில் நேருக்கு நேர் சுட்டுக் கொன்றான். பாயிண்ட் ப்ளாங்க் ரேஞ்ச்!

வெலவெலத்துப் போய்விட்டார்கள்.

உடனடியாக அவனைக் கைது செய்து, உரிய சடங்கு சம்பிரதாயங்களை நிறைவேற்றினாலும் அந்த யாமாகுச்சியோ... ஓமக்குச்சியோ அளித்த வாக்குமூலம்தான் இங்கே முக்கியம்.

'எனக்கும் அந்த ஆசாமிக்கும் சொந்தப் பகை. அதனால் கொன்றேன். இந்தக் கொலைக்குப் பின்னால் வேறு யாருமில்லை.'

இதெல்லாம் காவல்துறையினரை எத்தனை தூரத்துக்கு உசுப்பேத்தும் என்று யோசித்துப் பாருங்கள். அத்தனை பேரும் கொலைவெறியில் திரிந்துகொண்டிருந்தார்கள். எரிகிற கொள்ளியில் எருமைச்சாணி வரட்டியைத் தூக்கிப் போட்ட மாதிரி, அந்த மே மாதம் 5-ம் தேதி ஒரு சம்பவம் நடந்தது.

உலகிலேயே அதிக பிசியான ஸ்டேஷன் என்று சொல்லப்படுகிற டோக்கியோவின் ஷின்ஜுகு (Shinjuku Station) ரயில்வே ஸ்டேஷனின் டாய்லெட்டில் ஒரு காகிதப் பை எரிந்துகொண்டிருப்பதாக ரயில்வே போலீஸுக்கு யாரோ தகவல் சொன்னார்கள். அலறிப்புடைத்துக்கொண்டு ஓடிவந்து தீயை அணைத்துவிட்டு ஆராய்ந்து பார்த்தபோது, உள்ளே எரியத் தொடங்கப்போகிற நிலையில் ஹைட்ரஜன் சயனைடு! ஒரு சின்ன பாட்டில். மேலே ஒரு சிறு வால்வு. தீ வால்வுக்குள் போய்விட்டால் சரக்கு வேலையைத் தொடங்கிவிடும்.

தெய்வாதீனமாகக் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்தார்கள். விஷயம் வெளியே வந்தபோது, காவல்துறைத் தலைவர், அது செயல்பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்றும் சொல்லியிருந்தார்.

இருபதாயிரம் பேர் காலி.

கிட்டத்தட்ட அதே தினத்தில் (ஒன்றிரண்டு மறுநாள்) டோக்கியோ நகரில் மட்டும் பல்வேறு இடங்களில் இதே போன்ற சயனைடு குப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டன. எரிக்கப்பட்டிருந்தால் விபத்து நிச்சயம் என்கிற நிலையில், அனைத்தையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்திவிட்டார்கள்.

மறுபுறம் ஓம் என்று யாருடைய உள்ளம் உச்சரித்தால்கூட, சந்தேகப்பட்டு அரெஸ்ட் பண்ணும் படலம் தீவிரமாகத் தொடர்ந்துகொண்டிருந்தது. பல நூற்றுக்கணக்கான ஓம் தொண்டர்கள் கைதானபடியே இருந்தார்கள். யாருடைய, எந்தவித வாதத்தையும் காவல்துறையினர் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. 'வெள்ளைத் தக்காளி பக்தனா? ஏறு உள்ளே.' அவ்வளவுதான்.

ஆனால், இதில் ஒரு வியப்பான விஷயம் இருந்தது. டோக்கியோ சுரங்க ரயில் விபத்தில் தேடப்பட்டுவந்த முக்கியக் குற்றவாளிகள் யாரும், அந்தக் கணம் வரை கைதாகவேயில்லை. கைதானவர்களெல்லாம் புதிய சந்தேக கேசுகள்!

கொஞ்சம் வெறுப்பாகத்தான் இருந்தது அவர்களுக்கு. ஆனாலும் முயற்சியைக் கைவிடவில்லை. ஒரு மாதம் டார்கெட் வைத்திருந்தார்கள் அல்லவா?

அந்த மே மாதம் 16-ம் தேதி கனவு நனவானது.